**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 319 நாள்: 22.07.2026

**இன்று (22.07.2026) பெருநகர சென்னை மாநகராட்சி இணை ஆணையர் (பணிகள்) திரு. செ. சரவணன், இ.ஆ.ப., அவர்கள், ரிப்பன் கட்டடத்தில் உள்ள நகரத் திட்டமிடல் அலுவலகத்திற்கு திட்ட அனுமதி கோரி வரப்பெறும் விண்ணப்பத்தின் மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு, திட்ட அனுமதியினை தாமதமின்றி வழங்கிட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.**

இன்று (22.07.2026) பெருநகர சென்னை மாநகராட்சி இணை ஆணையர் (பணிகள்) திரு. செ. சரவணன்,இ.ஆ.ப., அவர்கள், ரிப்பன் கட்டடத்தில் உள்ள நகரத் திட்டமிடல் அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டு அலுவலர்கள் மற்றும் உரிமம் பெற்ற லைசென்ஸ்டு சர்வேயர்களிடம் கலந்துரையாடினார். பின்னர், திட்ட அனுமதி கோரி வரப்பெறும் விண்ணப்பத்தின் மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு, திட்ட அனுமதியினை காலதாமதமின்றி வழங்கிட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கம், ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம், கால்நடைத்துறை அலுவலகம், உடற்பயிற்சிக் கூடம், வருவாய்த்துறை, பணியாளர்களுக்கான மருந்தகம் உள்ளிட்ட அலுவலகங்களைப் பார்வையிட்டு, அலுவலக நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொள்ளவும், இதற்கான கட்டடங்களை தூய்மையாகப் பராமரித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**